காலத்தை வெல்லும் கருத்தோவியம் கலைஞர் கவிதைகள்

முத்தமிழ் அறிஞர் கலைஞரைப் போல், உலக அரங்கில் பன்முக ஆற்றல் வாய்ந்த தலைவராக வேறு எவரையும் குறிப்பிடுவது அரிதாகும். அரசியல் மேதை - கலைக்குரிசில் - இலக்கிய வித்தகர் - சமூகநீதிக் காவலர் - என இப்படிப் பல்திறனும் வாய்க்கப் பெற்றவர். கலைஞர் இலக்கியத்திலும், நாவல், சிறுகதை, பாடலாசிரியர், பேச்சாளர், இதழாசிரியர், வசனம் - கட்டுரை - கவிதை என அனைத்துத் துறைகளிலும் உச்சம் தொட்ட படைப்பாளியாகத் திகழ்பவர் கலைஞர்!

தன்னலம் கருதாது, பிறர் நலம் பொது நலமே நாடி, தன் படைப்புகளிலெல்லாம் மக்கள் மேம்பாடு, வாழ்வியல் முன்னேற்றத்திற்கான கருத்துகளை வாரி வழங்கிய ஆளுமை படைத்தவர் கலைஞர். இந்த ஆளுமை அவரின் கவிதைகளில் கொடிகட்டிப் பறக்கின்றது.

கலைஞர் தன் பதினாறாம் அகவையில் ஏழாம் வகுப்புப் படித்தபோதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு தமிழ்க் கொடியைக் கையில் பிடித்து,

"ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள் - நீ
தேடி வந்த கோழையுள்ள நாடு
இதல்லவே"

என்று முழக்கமிட்ட தமிழ்ப்போராளி, கவி ஆழி கலைஞர்!

சீரிளமைத் திறமும், பெருவளமும் மிக்க தமிழ்மொழிக்கு கலைஞர் தம் கைவண்ணக் கவிதைகள் செழுமை ஊட்டி உள்ளன.

கவிதை என்பது,

துடித்தெழும் உணர்ச்சியில்
வெடித்தெழும் ஊற்று!
கலையெழில் வழிந்திட முளைக்கும் நாற்று
கன்னல் மொழியில் மணக்கும் காற்று!

என்று கவிதைக்கு இலக்கணம் கூறுகிறார் கலைஞர்.

இசைஞானி இளையராசா கலைஞரின் கவிதையைப் பற்றிக் கூறும்போது,

தானே எழுத்தாகி தானே சொல்லாகி
தானே பொருளாகி தானே யாப்புமாகி
தானே அணியுமாகி மொழியாய் மொழிவளமாய்
கவிதையாய் தன்னைத் தானே
எழுதிக் கொண்ட
அழகான கவிதை கலைஞர்

என்கிறார். ஆக, கலைஞர் ஒரு பிறவிக் கவிஞர். கவிதையின் ஊற்றுக்கண்கள் கருவிலே திரு என் பார்களே அப்படி ஒரு வரலாறு கலைஞர் கவித்துவம்!

கலைஞரின் கவிதைகள் கோடிக்கணக்கான மக்களின் இதயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை வாய்ந்தன. அவரின் இசைப்பாடல்கள் தமிழ் அறிந்தவர்களை கட்டிப் போடும் தகுதியன.

"காகித ஓடம் கடல் அலை மீது
போவது போல மூவரும் போவோம்"

"வாழ்க்கை என்னும் ஓடம் வழங்குகின்ற பாடம்
"மானுடரின் மனதினிலே மறக்கவொண்ணா வேதம்"

"என்னருமை கண்ணுகுட்டி"

போன்ற பாடல்கள் காலம் கடந்தும் ஒலிக்கும்.

கலைஞரின் கவிதைகள் பல மாயம் புரிந்து மயக்கவல்லன. கலைஞரின் கவிதைகளில் உவமை உருவகங்கள் தானே வந்து விழும்.

உழவனோர் மன்னன்
நாற்று முடியிருக்கும் அவன் தலையில்
உழவன் ஓர்வீரன் என்றும்
போர் இருக்கும் அவன் களத்தில் வைக்கோல்போர்
உழவனோர் ஓவியன்
வயல்கள் அனைத்தும் அவன் வரைந்த சித்திரம்
உழவனோர் தெய்வம்
உயிர்களைக் காப்பதால்

உழவரை வைத்து உருவகமாக கலைஞர் வடித்த சொல்லோவியம்.

கணவனை இழந்த கைம்பெண்களைப் பற்றி கலைஞர் பாடும்போது,

கண்ணுக்குள் பாவைபோல
உருண்டிடும் உள்ளம் கைம்
பெண்ணுக்கு இருக்கும்

என்ற உவமை வளம் கொழிக்கின்றது.

பேரறிஞர் அண்ணாவைப் பற்றி பாடாத கவிஞர்கள் இருக்க முடியாது. ஆனால் 09.02.1969 அன்று சென்னை வானொலியில் **"இதயம் தந்திடு அண்ணா"** என்ற தலைப்பில் எதையும் தாங்கும் இதயம் படைத்த அண்ணாவைப் பற்றி பாடிய கவிதை வீர வணக்கத்திற்கு நிகராக வேறு எந்தக் கவிதையையும் சொல்ல முடியாது.

"அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்தபோது
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்
ஆணையிடுகிறார் எம்அண்ணா என்றிருந்தோம்
அய்யகோ; இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்
ஓர்விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம்அண்ணா இதய மன்னா...
படைக் கஞ்சாத்தம்பி உண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும்பயணத்தை
ஏன் தொடர்ந்தாய்?"

என்று உணர்ச்சி பொங்கப் பொங்கக் கவிதைக் கண்ணீர் கலைஞர் வடிக்கிறார்.

நிறைவாக **"இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா, நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை உன் காலடியில் வைப்பேன் அண்ணா"** என்று பாடும்போது கல்நெஞ்சமும் கரைந்து விடுகிறது.

கலைஞரின் கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள், சமுதாயச் சிந்தனைகள், செம்மொழிச் சிந்தனைகள் அனைத்தும் ஆர்ப்பாட்டம் செய்யும். இனிமை, எளிமை, தெளிவு, சுவை, நையாண்டி எல்லாம் துள்ளி விளையாடும்.

தமிழ்நாட்டின் நூற்றாண்டுக்கால அரசியல், கலை, இலக்கியத்தின் உன்னதம் தொட்ட கலைஞர் நாடகம், படத்துறை வசனம், உரைநடையில் கூடக் கவிதை நடைகள் நாட்டியமாடும். கவித்துவமே

பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்

உருவான கலைஞர் காலம் கடந்தும் வாழ்வார் அவர் கவித்திறத்தால்.

மக்களாட்சியின் உயிர்த்துடிப்பான பொதுவுடைமை பற்றி கலைஞர் விளக்குகிறார்.

"இனிய நாட்டில் இல்லார் இல்லை
நல்லார் மீது பாய்கின்ற
வல்லார் இல்லை
எங்கும் புதுமை எதிலும் புதுமை
அனைத்தும் பொதுவுடைமை"

எனப் பாடுகிறார். மேலும்,

"ஏழையர் சிரிப்பே இமயம் என்பேன்
எல்லார்க்கும் எல்லாம் கிடைத்திட உழைப்போம்
வையம் தழைக்க வறுமை தொலைப்போம்"

என்று சமநீதி முழக்கமிடுகிறார்.

சமநீதிக் காவலர் **முதன்மை முதல்வர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்களின் இன்றைய ஆட்சி கலைஞர் கவிதைப் பாதையில் **"எல்லோர்க்கும் எல்லாம்"** எனத் தடை பல கடந்து தந்தை அடிச்சுவட்டில் இன்று வெற்றி நடை போடுகிறது.

கலைஞர் கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கிப் பாடும்போது கவிஞர்களை அறிமுகம் செய்து அவர்கள் பாட்டுத்திறத்தை உயர்த்திப் பாடும் பாங்கே தனித்த பேற்றுடைத்தாகும். பழம்பெரும் **கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு** அவர்கள், கலைஞர் தலைமையில் பாடும்போது,

"கொத்தமல்லிக் கொப்பு குழம்பிலே மணக்கும்
கொத்தமங்கலம் சுப்பு குழம்பாமலே மணக்கும்"

எனப் பாடிச் சிறப்பித்தார் கலைஞர். கவியரசர் கண்ணதாசனை,

"கழித்தல் கணக்கில் இருந்த கண்ணதாசன் - இன்று
கூட்டல் கணக்கில் இணைந்து விட்டார் நம்மோடு"

என்று பாடி தன்னோடு மீண்டும் இணைந்தமைக்கு மகிழ்வூட்டினார் கலைஞர்.

கலைஞர் தலைமையில் பாடிய கவிக்கோ அப்துல் இரகுமான், கவிப்பேரரசு வைரமுத்து உள்ளிட்ட அனைத்துக் கவிஞர்களையும் பாடிப் பாராட்டியுள்ளார்.

என்னையும் ஒரு கவி அரங்கில் அறிமுகப் பாப் பாடி அழைத்தார். அக்கவிதை :

பெருங்கவிக்கோ சேதுராமன்

கவிமழை பொழிய வருகிறார்
வெளிநாட்டைச் சுற்றிச்சுற்றி
தமிழின் ஒளிகாட்டும் தமிழன்!
இன்னும் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு
ஒரு தமிழ்க்குழந்தை சொல்லும்
இவரைப் பார்த்துத்தான்
இராவணன் மீசைவைத்துக்
கொண்டான் என்று.

கலைஞரின் கவிதைகள் காலம் சொல்லும் கவிதைகள் - காலம் கடந்து வாழும் கவிதைகள் - காலத்தை வெல்லும் கருத்தோவியம்! ஊழி பெயரினும் தான்பெயராத் தனித்துவமாக, தனித்தவமாக வாழும் - மணம் கமழும் காப்பியக் கவிஞர் கலைஞர்!



மக்களாட்சி!

மக்களாட்சித் தத்துவம்; மத பேத பித்துக் கொண்ட மதோன்மத்தர்களிடம், சர்வாதிகார வெறி பிடித்தோரிடம் சிக்கிக் கொண்டால், அதை அந்தக் கொடியவர்களிடமிருந்து விடுவிக்கும் வரையில் "ஜனநாயகத்துக்கு சுதந்திரம் கிடையாது" என்ற உண்மையை ஒவ்வொரு குடிமகனும் உணர்ந்தால்தான், ஜனநாயகம் உயிர் பெற்றே இருக்க முடியும்! இல்லையேல் அதன் உடலைத்தான் நாறிப்போக விடுத்து நாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

- கலைஞர்

வாக்குச் சீட்டின் வலிமை !

மக்கள், தங்களை வெறும் வாக்காளர்களாக மட்டும் கருதிக் கொள்ளாமல்; இந்த நாட்டின் சிற்பிகள், சமுதாயத்தின் காவலர்கள், எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஏந்தல்கள் சுருக்கமாகச் சொன்னால், பாரதிமொழிப்படி "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்பதை நிலைநாட்ட வேண்டும், நிலைநாட்டியே தீர வேண்டும்.

அப்போதுதான், பழுதுபட்டுக் கொண்டிருக்கும் ஜனநாயகம், ஆழ உழுது விளைந்த கதிர் குலுங்கும் கழனியாக மாறும் !

- கலைஞர்